ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2336/46 - 2023 ජුනි මස 14 වැනි බදාදා - 2023.06.14

*2336/46 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 15/2014* (II)

***2014 அம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்***

இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி,
அதிகார சபைக்காகவும் அதன் சார்பிலும்.

கொழும்பு,
*2023, சனவரி 16.*

**விதிகள்**

1. இவ்விதிகள், 2023 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களின் விபரக்கொத்து விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கையினுள் நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர் உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் ஒவ்வொருவரும் விடயத்திற்கேற்றவாறு அவ் இறக்குமதியாளர்களின், உற்பத்தியாளர்களின் மற்றும் வழங்குநர்களின் விபரக்கொத்து ஒன்றினை பேணும் நோக்கத்திற்காக அதிகார சபையுடன் அத்தகைய இறக்குமதியாளர், உற்பத்தியாளர் அல்லது வழங்குநரை



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பதிவு செய்வதற்கு (இதனகத்துப்பின்னர் 'அதிகார சபை' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான விபரங்களுடன் சேர்த்து விண்ணப்பமொன்றை ஆக்குதல் வேண்டும்.

3. விடயத்திற்கேற்றவாறு 2 ஆம் விதியின்கீழ் இறக்குமதியாளராக, உற்பத்தியாளராக அல்லது வழங்குநராக பதிவு செய்வதற்கான கட்டளைக்கற்கள் இவ்விதிகளுக்கான முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

4. விடயத்திற்கேற்றவாறு இறக்குமதியாளராக, உற்பத்தியாளராக, அல்லது வழங்குநராக அதிகார சபையினால் பதிவு செய்யப்பட்ட ஆளெவரும், இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஏற்புடையற்பாலதான பதிவுக் கட்டணக் கொடுப்பனவின்மீது அதிகார சபையினால் விதித்துரைக்கப்பட்டவாறு பதிவிலக்கத்துடன் குறித்தொதுக்கப்பட்டு பதிவுச்சான்றிதழ் ஒன்றுடன் வழங்கப்படுதல் வேண்டும். இது அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி ஒன்றிற்கு செல்லுபடியானதாதலும் வேண்டும்.

5. விடயத்திற்கேற்றவாறு, இவ்விதிகளின்கீழ் அதிகார சபையினால் புதிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர் உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் ஒவ்வொருவரும் அத்தகைய பதிவு செய்தலின் காலாவதித் தேதிக்கு முன்னர், 4 ஆம் விதியின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழின் புதுப்பித்தலுக்காக இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு புதுப்பித்தல் கட்டணத்துடன் சேர்த்து அதிகார சபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

6. விடயத்திற்கேற்றவாறு இவ்விதிகளின்கீழ் அதிகார சபையினால் பதிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர், உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் ஒவ்வொருவரும் இதற்கான முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய இறக்குமதியாளர், உற்பத்தியாளர் அல்லது வழங்குநரின் செயலாற்றுகைமீது அதிகார சபையினால் தரப்படுத்தப்படுதல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

## நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான கட்டளைக்கற்கள்

1. நிர்மாண மூலப்பொருட்களினதும் ஆக்கக்கூறுகளினதும் ஒரு நம்பிக்கையான இறக்குமதியாளர், உற்பத்தியாளர் மற்றும் வழங்குநர்:

(அ) அதிகார சபையுடன் பதிவு செய்வதற்கு தகுதியுடையவராக இருப்பதற்கு ஒன்றில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கம்பெனிகளின் பதிவாளருடன் அல்லது வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது மாகாண வியாபார பெயர்கள் நியதிச் சட்டத்தின்கீழ் பிரதேச செயலகங்களுடன் பதிவு செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) இலங்கை அரசாங்கத்தினால் கடைசி மூன்று ஆண்டுகளினுள் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட தொழிற்பாடுகளின் ஏதேனும் பட்டியலில் உள்ளடக்கப்படலாகாது;

(இ) விண்ணப்பிக்கும் நேரத்தில் சட்டரீதியாக கடனிறுக்கவகையற்றவர் அல்லது அறிவிக்கப்பட்ட வங்கிமுறிந்தவராக இருத்தலலாகாது;

2. (1) பின்வரும் அடிப்படைத் செயற்பாட்டுப் பகுதிகளில் ஈடுபடுத்திக்கொள்ளும் ஐஎம்எஸ் (IMS) ஆனது கீழே கொடுக்கப்பட்ட மூன்று வகுதிகளின் ஒன்றின்கீழ் அல்லது அதற்கு மேற்பட்டதன்கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) இறக்குமதியாளர் (IM) - நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர்கள்.

(ஆ) உற்பத்தியாளர் (M) - தமது சொந்தத் தாபனங்களில் நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகளை உற்பத்திசெய்பவர்கள்.

(இ) வழங்குநர்கள் (S) - நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர்கள்.

(2) ஒரு செயற்பாடு பகுதிக்கு மேற்பட்டவைக்கு ஈடுபட விரும்புகின்ற எவரேனும் ஐஎம்எஸ் (IMS) ஆனது, அத்தகயை ஒவ்வொரு வகுதிக்குமான ஏற்புடையற்பாலதான பதிவுக்கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் தனிவேறான அதிகார சபையுடன் பதிவைப் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும்.

3. பதிவு செய்தலுக்கான நடவடிக்கைமுறை பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) வியாபாரத்தை பதிவு செய்வது தொடர்பான ஆவணங்களுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் செய்முறைக் கட்டணங்களுடன் சேர்த்து இவ் அட்டவணையின் 4.2 என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு மதிப்பீட்டின் முக்கிய விடயங்களை ஆதாரப்படுத்தும் இயைபான ஆவணங்களையும் அதிகார சபையின் தகவல் நிலையத்திற்கு சமர்ப்பிப்பது அவசியமானதாகும்;

(ஆ) எல்லா ஆவணங்களும் ஒழுங்குமுறையாக இருந்தால் மதிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பமானது ஆராய்ந்து அதிகாரமளிப்பதற்காக, (விண்ணப்பம் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களினுள்) பதிவு செய்தல் குழாமிற்கு அனுப்பப்படும்;

(இ) தரப்படுத்தலுக்கான மதிப்பீட்டு செய்முறையானது 4 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க நிறைவேற்றப்படும்;

(ஈ) விண்ணப்பம் செய்முறைப்படுத்தப்பட்டு தரத்தை தாபித்தபின்னர், விண்ணப்பதாரருக்கு பதிவிலக்கம் ஒன்று குறித்தளிக்கப்படும் என்பதுடன் பதிவுச் சான்றிதழ் ஒன்று 2 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு பதிவுக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் வழங்கப்படும்;

(உ) அத்தகைய பதிவு செய்தலானது பதிவுச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தர/சோதனை அறிக்கைகளின் ஆண்டு மீளாய்வு, கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுக்கள் மற்றும் ஆண்டுப் பதிவுக் கட்டணக் கொடுப்பனவு என்பவற்றுக்கு அமைய ஓர் ஆண்டு அடிப்படையில் புதுப்பிக்கப்படுதலும் வேண்டும்;

(ஊ) பதிவு செய்தலும் தரப்படுத்தும் அதிகார சபையின் கண்காணிப்புக் குழுவொன்றினால் செயலாற்றுகை மதிப்பீடு நிறைவேற்றப்பட்டதன் பின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாவதற்கு முன்னர் ஒரு மாதத்தினுள் புதுப்பிக்கப்படுதலும் வேண்டும்;

(எ) அதிகார சபையில் கிடைக்கக்கூடியதான சிற்றேடுகளில் பட்டியலிடப்பட்டவாறு பல்வேறு இறக்குமதிகள், உற்பத்திப்பொருட்கள் மற்றும் வழங்குதல்கள் ஆகிய வகுதிகளில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கின்ற ஐஎம்எஸ் (IMS) இயைபான ஆவணங்களுடன் சேர்த்து தனிவேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட அந்தந்த இறக்குமதி, உற்பத்திப்பொருள், அல்லது வழங்குதல்கள் வேறுபட்ட வணிகப்பெயர்களை உள்ளடக்குகின்றதாயின், அத்தகைய எல்லா வணிகப்பெயர்களும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்தல் ஆனது அத்தகைய வணிகப் பெயர்கள் தொடர்பில் மட்டும் இருக்கும்;

(ஏ) பதிவு செய்தல் ஆனது காலம் கழிந்ததாகும் பட்சத்தில், மீளப் பதிவு செய்தலானது புதிய விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன்மூலம் பெறப்படமுடியும், பதிவு செய்தலானது கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயனுடன் செல்லுபடியாகாது.

4. தரப்படுத்தல்

4.1 தரப்படுத்தல் கட்டளைக்கற்கள்

ஐஎம்எஸ் (IMS) ஆனது குறித்துரைக்கப்பட்ட இறக்குமதிகள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் வழங்குதல்கள் என்பவற்றுக்கான மூன்று அடிப்படை மட்டங்களில் தரப்படுத்தப்படும். ஐஎம்எஸ் பதிவுமுறைமை (IMSRS) இனால் ஐஎம்எஸ் (IMS) இன் செயலாற்றுகைப் பகுப்பாய்வுகள் ஆனவை அத்தகைய தரப்படுத்தலுக்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. செயலாற்றுகை மட்டமானது பின்வரும் "செயலாற்றுகை குறிகாட்டிகள்" மீது அளவிடப்படுகின்றது.

(அ) தரம்;
(ஆ) தொழில் ஆற்றல்கள்;
(இ) நிதிசார் இயலளவு

தரப்படுத்தலுக்கான புள்ளிகள் பட்டியல் (ஆ) வில் கொடுக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்க "மதிப்பீடு செய்தலின் மொத்தப்புள்ளிகள் மற்றும் முக்கிய விடயங்கள்" என்னும் தலைப்பின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் (இ) தொடக்கம் பட்டியல் (உ) வரை கொடுக்கப்பட்டவாறு செயலாற்றுகை குறிகாட்டிகளுக்காக ஒதுக்கப்படும். ஆகக்குறைந்த மொத்த புள்ளிகள் அதே தலைப்பின் பட்டியல் (அ) வில் கொடுக்கப்பட்ட புள்ளிக்கு அமைவாக இருக்கும்.

*4.2 மதிப்பீடு செய்தலின் மொத்தப் புள்ளிகளும் முக்கிய விடயங்களும்*

**பட்டியல் (அ): தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த மொத்தப் புள்ளிகள்**

| தரம் | ஆகக்குறைந்த மொத்தப் புள்ளிகள் |
|---|---|
| IM/M/S-1 | 75 |
| IM/M/S-2 | 30 |
| IM/M/S-3 | 5 |

**பட்டியல் (ஆ): நிர்மாண மூலப்பொருட்களின் மதிப்பாய்வுக்கான அளவீடுகள்**

| செயலாற்றுகை குறிகாட்டி | அளவீட்டு வீதம் (%) |
|---|---|
| 1. தரம் | 50 |
| 2. தொழில் ஆற்றல் | 30 |
| 3. நிதிசார் இயலளவு | 20 |

**பட்டியல் (இ): நிர்மாண மூலப்பொருட்களின் தரம்**

| கட்டளைக்கல் | மொத்தப் புள்ளிகள் (100) | |
|---|---|---|
| | மணல், மண் மற்றும் கற்சுரங்கப் பிரித்தெடுப்புக்கள் போன்ற விடயங்கள் தவிர வேறு | மணல், மண் மற்றும் கற்சுரங்கப் பிரித்தொடுப்புக்கள் போன்ற விடயங்கள் |
| 1. சான்றுப்படுத்தப்பட்ட இலங்கைத் தரநியமம் (SLS) | 45 | 20 |
| (அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு மட்டும் சான்றுப்படுத்தப்பட்டது) | (30) | (10) |
| 2. இலங்கை தரநியமத்திற்கு அமைய உற்பத்தி செய்யப்படட்டது (SLS) | 15 | 20 |
| (அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு மட்டும் உற்பத்தி செய்யப்பட்டது) | (10) | (10) |
| 3. முறைமைச் சான்றுப்படுத்துகை | 25 | 5 |
| 4. உள்ளக பரிசோதனை வசதி | 10 | 5 |
| 5. நடைமுறையிலுள்ள தரநியமங்களுக்கு அமைய சோதனை அறிக்கைகளை வழங்குவதற்கான திறன் | 5 | 50 |

**பட்டியல் (ஈ): தொழில் ஆற்றல்**

| கட்டளைக்கல் | மொத்தப் புள்ளிகள் (100) |
|---|---|
| 1. சேவைப் பதிவேடுகள் | |
| 1.1 *வழங்கப்பட்ட நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகள் ஒன்றுக்கான சேவையில் 2 வருடங்களுக்கு மேற்பட்டது | 60 |
| 1.2 *வழங்கப்பட்ட நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகள் ஒன்றுக்கு ஒன்று தொடக்கம் இரண்டு வருடங்கள் | (40) |
| 1.3 *ஒரு வருடத்திற்கு குறைவானது | (20) |

| | |
|---|---|
| *2. கடைசி 03 ஆண்டுகளின் போதான விற்பனைகள் – ஆண்டு விற்பனைகளின் சராசரி – மில்லியன் ரூபாக்களில்* | |
| *2.1 *5.0 ற்குமேல்* | *40* |
| *2.2 *1.0 இற்கு 5.0 இற்கும் இடையில்* | *30* |
| *2.3 *1.0 இற்கு குறைவானது* | *15* |
| | |

**பட்டியல் (உ): நிதிசார் இயலளவு**

| *கட்டளைக்கல்* | *மொத்தப் புள்ளிகள் (100)* |
|---|---|
| *1. கணக்காய்வு அறிக்கைகளின் கிடைப்பனவு* | |
| *1.1 *இறுதி 03 வருடங்களுக்கு (பூர்த்தி)* | *30* |
| *1.2 *உடன் கடந்த வருடம்* | *20* |
| *1.3 *உடன் கடந்த வருடத்திற்கு முன்னரான அறிக்கைகள்* | *5* |
| *2.0 கணக்காய்வு அறிக்கைகளின் அடிப்படையில் ஆண்டுக்கான மொத்தப் புரள்வு* | |
| *2.1 *10 மி மேலே* | *35* |
| *2.2 *4 மி தொடக்கம் 10 மி* | *20* |
| *2.3 *1 மி தொடக்கம் 10 மி* | *10* |
| *3. மொத்தச் சொத்துக்களின் வீதசாரமாக நேர் மேறிய பெறுமதி* (கணக்காய்வு அறிக்கைகளின் அடிப்படையில்)* | |
| *3.1 *50 த்திற்கு சமமாக அல்லது அதற்கு மேல்* | *35* |
| *3.2 *50% தொடக்கம் 25%* | *20* |
| *3.3 *25% தொடக்கம் 10%* | *10* |

குறிப்புகள்:

(1) பட்டியல் (அ) விலுள்ள மொத்தப் புள்ளிகள் முறையே பட்டியல்கள் (ஆ) மற்றும் (இ) தொடக்கம் (உ) வில் குறிப்பிடப்பட்ட அளவீடுகள் மற்றும் அடையாளக் கட்டளைக்கற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடையற்பாலன வாகின்றதாக ஒதுக்கப்படும்.

(2) சரிபார்த்தலுக்கான தொகைகள் மற்றும் ஆதரவு ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட பட்டியல் (ஈ) வில் உள்ள தொழில் ஆற்றல் கட்டளைக்கல் தேவைப்படுத்தப்படுகின்றன.

(3) பட்டியல் (இ) வில், நிர்மாண மூலப்பொருட்கள் அதன்கண் பட்டியலிடப்பட்ட ஆகக்குறைந்தது ஒரு தர கட்டளைக்கல்லொன்றால் அனுசரணையாக இருப்பது அவசியமானது ஆகும். பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு நிர்மாண மூலப்பெருட்களுக்கான தரக் கட்டளைக்கல்லின் குறித்த கட்டாயமான தேவைப்பாடானது அதிகார சபையில் கிடைக்கக்கூடியதான சிற்றேடுகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) மேலே கொடுக்கப்பட்ட பட்டியல் (இ) தொடக்கம் (உ) வரையில், குறிப்பிடப்பட்ட புள்ளிகள் கொடுக்கப்பட்ட கட்டளைக்கல்லிற்கு கிடைக்கப்பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளாக இருக்கின்றன.

(5) பட்டியல்கள் (இ) வில் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட புள்ளிகள் பதிலீடுகளாகும்.

(6) பட்டியல் (இ) தொடக்கம் (உ) வரையிலுமான விடயங்கள் தொடர்பில் எண்பித்த ஆவணங்கள் விண்ணப்பங்களுடன் சேர்த்து மதிப்பீடு செய்வதற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை**

**நிருமாண மூலப்பொருட்கள் மற்றும் நிருமாண ஆக்கக்கூறுகளை இறக்குமதியாளர்களுக்கான, உற்பத்தியாளர்களுக்கான மற்றும் வழங்குநர்களின் பதிவு செய்தல், புதுப்பித்தல் அல்லது பதிவு செய்தலை தரமுயர்த்துதல் என்பவற்றுக்கான கட்டணங்கள்**

1. விண்ணப்ப செய்முறைக் கட்டணம் ரூபா 1000.00 எல்லாத் தரங்களுக்கு ஏற்புடயதாகும்.

2. வேறுபட்ட தரங்களுக்கான பதிவு செய்தல், பதிவு செய்தலைப் புதுப்பித்தல் மற்றும் தரமுயர்த்தல் கட்டணங்கள் பட்டியல்கள் 1 மற்றும் 2 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**பட்டியல் 1: வழங்குநர்களின் தரங்களைப் பதிவு செய்தல், பதிவு செய்தலைப் புதுப்பித்தல் அல்லது பதிவுக் கட்டணத்தை உயர்த்துதலும்.**

| தரம் மற்றும் ஏற்புடையற்பாலதான வழங்குநர் வகையீடு | ஆண்டுக்கட்டணம் பெ. சே. வ. நீங்கலாக (VAT) ரூபாவில் |
|---|---|
| S-1 | 22,000.00 |
| S-2 | 18,000.00 |
| S-3 | 15,000.00 |

**பட்டியல் 2: இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களுக்கான தரங்களைப் பதிவு செய்தல், பதிவு செய்தலைப் புதுப்பித்தல் அல்லது பதிவுக் கட்டணத்தை உயர்த்துதலும்.**

| தரமும் ஏற்புடையற்பாலதான இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் வகையீடு | ஆண்டுக்கட்டணம் பெ. சே. வ. நீங்கலாக (VAT) ரூபாவில் |
|---|---|
| IM/M-1 | 40,000.00 |
| IM/M-2 | 36,000.00 |
| IM/M-3 | 30,000.00 |

3. விசேட சூழ்நிலைகளின்கீழ் ஒவ்வொரு விண்ணப்பத்தின் அவசரமான செய்முறைக்காக ரூபா 5,000.00 மேலதிக கொடுப்பனவு அறவிடப்படும்.

4. பதிவு செய்தலை புதுப்பித்தல் மற்றும் தரமுயர்த்துதலுக்கான ஒவ்வொரு வேளையிலும், செயலாற்றுகை மதிப்பீடுகளின்மீதான செலவு தேவைப்படுமிடத்து, அதிகார சபையினால் தயாரிக்கப்படும். இச் செலவு அந்த பதிவு செய்தலை புதுப்பித்தல் அல்லது தரமுயர்த்துதலுக்கு முன்னர் விண்ணப்பதாரியினால் மீளப்பெறப்படுதல் வேண்டும்.

EOG 06 - 0105